# சூத்திரம்

www.sooddram.com

The Formula





சூத்திரம்
முதற்பக்கம்
FONTS/எழுத்துரு
சர்வதேச நேரம்
தொடர்புகளுக்கு
கட்டுரைகள்
பொதுவிடயம்
அரசியல் சமூக ஆய்வு
இலங்கைத் தமிழர் போராட்டம்
இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
சர்வ தேச அரசியல்
அரசியல் தீர்வு
கவிதைகள்
சமூக விழிப்பு
போராட்டம்
பொது விடயம்
புகைப்படங்கள்
எமது வாழ் நிலங்கள்
போராட்டங்கள்
போராட்ட தடயங்கள்
இணையத்தளங்கள்
கண்ணோட்டம்
பூந்தளிர்
தூ
தேனி

## 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

### *நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 25)*

(கிறேசியன், நாவாந்துறை)

பாலன் மேலும் சொன்னார், இறைச்சிக் கடையில் நான் பட்ட கொடுமைகளை விட ஏனைய சகோதரர்கள் மிகவும் பயங்கரமான கொடுமைகளைச் சந்தித்துள்ளனர். தினமும் அந்த முகாமில் இரண்டு பேரையாவது கொலை செய்வார்கள். சகோதரர்கள் படும் துயரம் சொற்களால் விபரிக்க முடியாதவை. அந்த முகாமுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இளைஞர்களைக் கொண்டு வருவார்கள். அம்பாறை முதற்கொண்டு காங்கேசன்துறை வரை உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அங்கு இருந்தனர். கால்கள் உடைக்கப்பட்டு, கைகள் உடைக்கப்பட்டு, முகங்கள் உடைக்கப்பட்டு நாளடைவில் அனைவரையும் கொன்றுகொண்டே இருந்தனர்.

யாழ்ப்பாண வெளியேற்றத்தின் போது அந்த இறைச்சிக்கடையில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரையும் கொலை செய்து அங்கேயே புதைத்துவிட்டுத்தான் இவர்கள் வன்னிக்கு ஓடிவந்ததாகக் கேள்விப்பட்டேன். அப்படி இவர்கள் அந்த இளைஞர்களைக் கொலை செய்திருந்தால் அப்பழி இவர்களைச் சும்மாவிடாது. ஆண்டவன் தண்டிக்கத் தாமதம் ஆனாலும் இவர்களை ஒருநாள் இயற்கை தண்டிக்கும் என்று கூறிய பாலன், நாங்கள் இப்படிச் சந்தித்துக் கதைத்த நாங்கள் என்று யாராவது வெட்டிகள் போட்டால் திரும்பவும் கொண்டுபோய் சித்திரவதை செய்வார்கள். இன்னொரு நாளைக்குச் சந்திப்பம்

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**"அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

தம்பி என்று கூறிச் சென்றார். இந்தியா வந்து சேரும்வரை அவரை என்னால் சந்திக்க இயலவில்லை!

என்னை இருபாலை முகாமுக்குக் கொண்டு வந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. எந்த விசாரணையும் இல்லை. ஆனால் தினமும் யாராவது வரும் புதிய விலங்குகள் அனைவருக்கும் உதை விருந்து வைத்துக்கொண்டே இருந்தனர். இறைச்சிக் கடைக்கு ஏறக்குறைய நாற்பதுக்கும் மேற்பட்டவர்களைக் கொண்டு சென்றிருந்தனர்.

சின்னக்கேடியும், திசையும் வாரத்தில் மூன்று நாட்கள் தவறாமல் உள்ளே வந்து தங்களது விருப்பம் பூர்த்தியாகும் வரை அடிப்பார்கள். சித்திரவதை செய்வார்கள், கடைசியாக வெளியே செல்லும் போது நடராஜ் அவர்களை உருட்டிப் புரட்டி எடுத்துத் தாக்கிவிட்டு செல்வார்கள்.

நாவாந்துறையைச் சேர்ந்த ஜெகன் ஞானதாஸ் என்பவரையும் மேலும் ஐந்து பேரையும் ஒருநாள் இரவில் கொண்டுவந்தனர் இருபாலைக் காம்புக்கு. ஞானதாஸ் அவர்கள் ஏற்கனவே ரெலோ இயக்கத்தில் இருந்தவர். படகுகள் ஓட்டுவதில் சிறந்த பயிற்சிப் பெற்றிருந்தார். இவர் ரெலோவில் தாஸ் குழுவினரைச் சேர்ந்தவர். ரெலோ இயக்கத்தை இவர்கள் தாக்கிப் படுகொலை செய்த பின்னர் ஞானதாஸ் அவர்கள் எந்த இயக்கத்திலும் சேராது இருந்தார். அப்படியிருக்கையில் ஆறு ஆண்டுகள் கழித்து இவரை எதற்காக இப்போது இழுத்துவர வேண்டும் என்பதை அறிய ஆர்வம் ஏற்பட்டது.

ஞானதாஸ் அவர்களை இரண்டு நாட்கள் நாவல் மரத்தின் கீழ் வைத்து சித்திரவதை செய்து பின்னர் எனது அறைக்கு அருகில் விடப்பட்டார். இரண்டு மூன்று நாட்களில் அவருடன் கதைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் விபரித்தார்:- தம்பி எனது இயக்கப் பெயர் ஜெகன். தாஸ் அண்ணன் தான் என்னை இயக்கத்துக்கு அழைத்து வந்தார். அவர் சுடப்பட்டதும் நான் இயக்கத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். ஆயினும் என்னைப் பிடிப்பதற்கென்று கிட்டு தலைமையில் ஒரு குழு நாவாந்துறைக்கு வந்தது. கிட்டுவுடன் பாறூக் என்பவரும் வந்தார்.

அன்றைய தினம் எங்கள் சென்மேரீஸ் கோவில் திருநாள் நடந்துகொண்டிருந்தது. 29-04-1986 அன்று இரவு ஏழுமணியளவில் என்னைப் பிடிப்பதற்கென்று வந்த நபர்களை அடித்துவிட்டு பின்பக்கத்துச் சுவரால் ஏறி குதித்து கன்னியாஸ்திரிகள் இருக்கும் பகுதிக்குள் நுழைந்துவிட்டேன். என்னை நோக்கி பலதடவைகள் சுட்டார்கள் புலிகள். கிட்டு வானத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு பைத்தியம் பிடித்தவர் போல் மக்களுக்குள் ஓடித்திரிந்தார். வெடிச்சத்தம் கேட்டதும் என்னை அவர்கள் சுட்டுவிட்டனர் என்று கருதி புலி நபர்களைச்

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………"

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

***இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!*** **நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?**

(சாகரன்)

சூழ்ந்துகொண்டு மக்கள் தாக்கத் தொடங்கிவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கிட்டு ஒரு நபரையும், பாறூக் ஒரு நபரையும் சுட்டுக்கொன்று விட்டனர். இதனால் மக்கள் மேலும் ஆத்திரமடைந்து கிட்டு வந்த வானை கவிழ்த்துத் தீ வைத்துவிட்டனர். புலிகள் அனைவரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். அரைமணித்தியாலத்தில் நான் மீண்டும் கோவிலுக்கு வந்தேன். அங்கே இருந்தவர்கள் என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். உன்னைக் கொன்று விட்டார்கள் என்று நினைத்துத்தான் அவங்களை நாங்கள் தாக்கினோம். அவங்கள் விஜயனையும், ரெட்னசிங்கத்தையும் சுட்டுக் கொன்றுவிட்டு ஓடிவிட்டார்கள் என்று கூறினர்.

மறுநாள் இருவரது உடல்களும் அடக்கம் செய்யப்பட்டப் பின்னர் எரிந்த வானை இழுத்து ஓரமாகத் தள்ளிவிட்டு நான் கோவிலின் பின்புறத்தில் தங்கியிருந்தேன். மூன்றாம் நாள் மாத்தையாவும், கிட்டுவும் அறுபது எழுபது பேருடன் துப்பாக்கிகளுடன் வந்து ஊர்த் தலைவர் மற்றும் பாதர் சிஸ்ரர் மாருடன் கதைத்தனர். கிட்டு அவர் வந்த வாகனத்தினுள் அமர்ந்துகொண்டார். பாதர் வற்புறுத்தி கிட்டுவையும் வந்து பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும்படி கூறி அழைத்து வந்தார்கள். எங்கள் தலைவரைப் பார்த்து மாத்தையா சொன்னார்:- நாங்கள் ரெலோ இயக்கத்தைத் தடைசெய்துள்ளோம். உங்களுக்கும் அது தெரியும். நாங்கள் ஒரு விசாரணைக்காகத்தான் ஜெகனை கூட்டிக்கொண்டு போக வந்தோம், அவர் எங்கட பொடியங்களை அடிச்சுப் போட்டு ஓடிப் போய்விட்டார். அதில் நடந்த சில குழப்பத்தால எங்கட பொடியல் சுட்டுப் போட்டினம். அதனால இங்க இருந்தவையள் எங்கட பொடியன்கள் அடிச்சும் போட்டினம். இதனால எங்களுக்குப் பெரிய அவமானமாப் போச்சு. எங்கட வானையும் எரிச்சுப் போட்டினம். அந்த வான் எங்களுக்கு ஒரு ராசியான வான். அந்த வானை இழந்த எங்களுக்கு பெரிய இழப்பு! நாங்கள் இப்போது சண்டை போடுவதற்கு வரவில்லை. எங்களுக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்று கதைக்கத்தான் வந்தநாங்கள், என்று முடித்தார் மாத்தையா!

உடனே எங்கள் ஊர்த் தலைவர் நீங்கள் சுட்டுக் கொன்ற இரண்டு பேருக்கும் என்ன பரிகாரம் செய்யப் போறியள் என்று சொல்லுங்கோ என்றார். கிட்டுவுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. ஆயினும் மாத்தையா, அன்றைக்கு ஆயுதங்களைப் பறித்த படியால்தான் சுடவேண்டி வந்தது. அது தவறுதலாக நடந்த ஒன்றுதான் என்று கூறி பரிகாரப் பிரச்சினையைத் திசை திருப்பினார். எங்கள் பகுதியில் உயிரிழப்பு ஏற்பட்டதையிட்டு அவர்கள் கவலையடையவில்லை. ஆனால் அவர்களுக்கு அவமானம் ஏற்பட்டதையிட்டு வருத்தப்பட்டனர்.

இறுதியாக மாத்தையா கூறினார், பாதர் எங்களுக்கு

வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம்

*- பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

*“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”*
**வெகு விரைவில்...**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

ஆணை இட்ட அதிபர் ‘கை’, வேட்டு வைத்த

பெரிய அவமானம் ஏற்பட்டுவிட்டது, நீங்கள் ஜெகனை எங்களிடம் ஒப்படைத்தால் நாங்கள் நாளைக்கே உங்களிடம் கொண்டு வந்து ஒப்படைத்துவிடுவோம். இது ஓர் கௌரவப் பிரச்சினை! எங்கட பொடியள் எங்களை மதிக்கவே மாட்டார்கள். நாவாந்துறையில அடிச்சு விரட்ட ஓடியந்தவயள்தானே என்று எங்களை ஏளனமாகக் கதைப்பார்கள். அதனால நாங்கள் ஜெகனைப் பிடித்துவந்து விசாரிச்ச நாங்கள் என்று எங்கட ஆக்களுக்குக் காட்ட வேண்டும், அப்படிச் செய்தால் எல்லாரும் அமைதியாகி விடுவார்கள், எங்களுக்கும் பிரச்சினை இருக்காது. ஆகையால் சத்தியமாகச் சொல்றன் பாதர் நான் எனது பொறுப்பில் கூட்டிக் கொண்டுபோய் நாளைக்கு திரும்பவும் உங்களிடம் கூட்டிக்கொண்டு வந்து விட்டிரன் என்று மாத்தையா சத்தியம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து, ஊர்த் தலைவரும் பாதரும் என்னுடன் கதைத்தனர். பாதரிடமும் தலைவரிடமும் உறுதி கூறினால் நான் அவர்களுடன் சென்று வருகிறேன் என்று கூறி அவர்களுடன் கிளம்பினேன். அவர்கள் என்னை வேம்படிக்குக் கொண்டுச் சென்றனர். அங்கிருந்து கண்ணைக் கட்டி மேலும் ஓரிடத்துக்கு கொண்டு சென்றனர். சிலர் வந்து என்னைப் பார்த்தனர். அப்போதும் எனது கண்களைக் கட்டித்தான் இருந்தனர். யாரும் எனக்கு அடிக்கவில்லை. ஆனால் தூசண வார்த்தைகளால் வறுத்து எடுத்தனர்.

இப்போது நீ தப்பிவிட்டாய் ஒருநாள் மீண்டும் அகப்படுவாய் அப்போது பார்த்துக்கொள்வோம் உன்னை என்று மிரட்டினர். செல்வம் எங்கே இருக்கிறான். பொபி எங்க இருக்கிறான், என்று கேட்டனர். எனக்கும் அவர்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்றேன்! அவர்களுக்கும் அது தெரியும். தெரிந்தே வேண்டுமென்று கேட்டனர். ஏனெனில் என்னிடம் கேட்பதற்கு எதுவுமே இருக்கவில்லை. தாங்கள் ஓர் ஆதிக்க வாதிகள் என்பதைக் காண்பிக்கவேதான் என்னைப் பிடிக்க வந்தார்கள்.

மறுநாள் என்னை வான் ஒன்றில் ஏற்றினர். முன் இருக்கையில் திலீபன் ஏறி அமர்ந்தார். மாத்தையாவுடன் வந்தவர்களில் திலீபனும் இருந்தார் முதல் நாளில். அப்போது அவர் திலீபன் என்பது எனக்குத் தெரியாது. அழைத்து வந்து பாதரிடம் ஒப்படைத்தனர் என்னை.

(தொடரும்…)

ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?

(சாகரன்)

சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.

(சேகர்)

அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.

(அ. வரதராஜப்பெருமாள்)

*தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு*

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?

(சாகரன்)

*ஜனவரி இருபத்தாறு!*

விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?

(மோகன்)

2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!

*'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'*

(சாகரன்)

*சபாஷ் சரியான போட்டி.*

மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.

(யஹியா வாஸித்)

கூத்தமைப்பு

**கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

*தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை*

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

*தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு*

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும் - சாகரன்

*அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது*

*திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*

- அ.வரதராஜப்பெருமாள்

*மலையகம் தந்த பாடம்*

வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா? - சாகரன்

*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!* - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com